**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.122** **நாள்: 12.05.2022**

**அடையாறு மண்டலத்திற்குட்பட்ட வேளச்சேரி மயான பூமி திரவ பெட்ரோலிய தகன மேடையாக மாற்றம், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இருப்பதால், பொதுமக்கள் பாலகிருஷ்ணாபுரம் மயான பூமி மற்றும் பாரதி நகர் மயான பூமியினை பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், கோட்டம்-172, வேளச்சேரி இந்து மயான பூமியின் எரிவாயு தகன மேடை சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் திரவ பெட்ரோலிய தகன மேடையாக மாற்றம் செய்திடவும் மேலும் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் 13.05.2022 முதல் 31.07.2022 வரை இயங்காது.

எனவே, பராமரிப்பு பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அருகிலுள்ள வார்டு-163க்குட்பட்ட பாலகிருஷ்ணாபுரம் மயான பூமி மற்றும் வார்டு-177க்குட்பட்ட தரமணி வேளச்சேரி மெயின் ரோட்டில் அமைந்துள்ள பாரதி நகர் மயான பூமியினை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**